ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220613

இலங்கையின் பாற்பண்ணைக் கைத்தொழிலை வலுப்படுத்துவதற்கு 27 மில்லியன் டொலர்களை வழங்கும் அமெரிக்கா

ஜூன் 13 ஆம் தேதி, அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் "Food for Progress" எனும் முன்முயற்சியில் பங்கேற்கும் இலங்கைப் பாற்பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்ட 27 மில்லியன் டொலர் பெறுமதியான ஒரு செயற்திட்டம் தொடர்பாக இலங்கையின் விவசாயத் திணைக்களத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடும் நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் கலந்துகொண்டார்.

இலங்கை அரசாங்கத்துடனான நெருங்கிய பங்காண்மையுடன், இச்செயற்திட்டம் 2017 இன் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இச்செயற்திட்டத்தினால் ஏற்கனவே 25,000 இலங்கை பாற்பண்ணையாளர்கள் பயனடைந்துள்ளதுடன், அவர்களின் பால் உற்பத்தி இதுவரை சராசரியாக 68 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கையின் உணவுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிசெய்வதற்கான அமெரிக்காவின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, 80,000 இலங்கையர்கள் இத்திட்டத்தின் மூலம் உதவிகளைப் பெறுவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. கொவிட் பெருந்தொற்று உட்பட எதிர்பாராத தாமதங்களுக்குப் பின்னர், அமெரிக்க தூதரகம் மற்றும் இலங்கை விவசாயத் திணைக்களம் என்பன இப்பங்காண்மை ஒப்பந்தத்தை இன்று இறுதி செய்தன.

"இந்த 27 மில்லியன் டொலர் பங்களிப்பானது, இலங்கையில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதில் அமெரிக்கா கொண்டுள்ள பல வருட உறுதிப்பாட்டிற்கான ஒரு பிரதான உதாரணமாகும். இவ்வுதவியானது நாட்டின் பாற்பண்ணைக் கைத்தொழில் உற்பத்தியை கணிசமாக மேம்படுத்துவது மட்டுமன்றி - முன்னெப்போதையும் விட தற்போது அவ்வாறான மேம்பாடு மிகவும் முக்கியமானது - அது இலங்கையின் பாற்பண்ணையாளர்கள் போட்டியிடவும், வளர்ச்சியடையவும் மற்றும் செழித்தோங்கவும் அவசியமான வளங்களை அவர்களுக்கு வழங்குகிறது." என தூதுவர் சங் குறிப்பிட்டார்.

பண்ணை நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான திறன்களை இலங்கை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக International Executive Service Corps எனப்படும் அமெரிக்க இலாப நோக்கற்ற நிறுவனத்துடன் Food for Progress இன் சந்தை சார்ந்த பாலுற்பத்திச் செயற்திட்டம் கூட்டிணைகின்றது. விவசாயிகள் தங்கள் வணிகங்களை விரிவுபடுத்துவதற்கும் புதிய சந்தைகளை அடைவதற்கும் உதவக்கூடிய நிதியிடல்களுக்கான சிறந்த அணுகலையும் அது வழங்கும்.

இலங்கை விவசாயிகளுக்கு உதவுவதற்கு மேலதிகமாக, அமெரிக்க விவசாயத் திணைக்களமானது கடந்த வருடம் Save the Children அமைப்பின் ஒருங்கிணைப்புடன் நாடு முழுவதுமுள்ள 453,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு பயனளித்த, பாடசாலை போஷாக்கு நிகழ்ச்சித்திட்டமொன்றிற்கு 26 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. ஒட்டுமொத்தமாக, உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான USDA இன் முன்முயற்சிகள் அரை மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களுக்கு பயனளித்து வருகின்றன. அவை பாடசாலை பிள்ளைகளுக்கு அத்தியாவசிய ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதிசெய்வதுடன், விவசாயிகள் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் உதவுகின்றன.

சந்தை சார்ந்த பாலுற்பத்திச் செயற்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை பின்வரும் பக்கத்தில் அறிந்துகொள்ளலாம்: https://www.market-oriented-dairy.org/